# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 44 - 2023*

**கல்வி – 04.11.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**கலைவகுப்புகள் - 04.11.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

## பெற்றோர்குழு 2023-2024 தெரிவு

இவ்வாரம் வகுப்புப் பிரதிநிதிகள் சந்திப்பும் பெற்றோர்குழுத் தெரிவும் இடம்பெறும். இக் கல்வியாண்டில் வகுப்பறைச் சந்திப்புகளில் தெரிவான அனைத்து வகுப்புப் பிரதிநிதிகளையும் காலை 09:45 இற்கு கீழ்க்கட்டிடத்திலுள்ள பணியாளர்கள் அறைக்கு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## வாணிவிழா 2023

Kjenn Samfunnshus மண்டபத்தில் நவராத்திரி விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது

இவ்விழாவினை சிறப்பாக நடாத்த பணியாற்றிய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் குழு, பெற்றோர் மற்றும் வளாக நலன்விரும்பிகள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பல்லின கலாச்சார ஒன்று கூடல் 2023.

நடந்து முடிந்த பல்லின கலாச்சார ஒன்று கூடல் மிகவும் சிறப்பாகவும் பலரின் பாராட்டுகளை பெற்றதில் மிக்க மகிழ்ச்சி. இதற்கு கடுமையாக உழைத்த அனைவருக்கும் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

## எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்

ஆண்டுக்கூட்டம் பகுதி 2 - 11.11.2023
நத்தார்விழா - 16.12.2023

**மழலையர் முற்றம்**

நாள் : ஞாயிற்றுக்கிழமை 03.12.2023

இடம் : Nedre Rommen 3, 0988 Olso

நேரம் : 13.00

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிதி 2023

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

jude@annai.no

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!